1979 பிப்ரவரி 17]

பெரியகுளம் அரசு மருத்துவமனை.

*வினா எண். 76— திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டவும், Blood Bank ஏற்படுத்தவும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: 1979–80-ம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டமாக பரிசீலிக்கப்படும்.

சென்னை நகரில் பணியாற்றுவோருக்கு விடுதிகள்.

*வினா எண். 77— திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கென தனியே விடுதிகள் அமைத்துத்தரும் செயற் குறிப்பு ஏதேனுப் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலும், சென்னை போன்ற பெரிய நகரங்களிலும் அரசு அலுவலகங்களிலும், மற்ற அலுவலகங்களிலும் இருப்பவர்கள் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, சாதாரண ஹாஸ்டல் போன்ற விடுதிகளைக் கட்டி, சலுகை வாடகைக்கு அறைகளை விட்டால் அவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அதிலும் பேச்சிலராக இருப்பவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். எனவே, அந்த வகையில் ஒரு விடுதியைக் கட்டுவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா? நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே சமூக நல இயக்குநரின் முழுமையான கட்டுப்பாட்டுடன் ஒரு இல்லம் எழும்பூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பணிபுரியும் 25 பெண்கள் அங்கே தங்கி வசதி பெற்று வருகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச்சிலர் என்று குறிப்பிட்டார்கள். இது சமூக நல இலாக்கா, இது பெண்கள் சம்பந்தப்பட்டது. எனவே ஸ்பின்ஸ்டர் என்று சொன்னால் சரியாக இருக்கும். ஆனால் இதே இல்லத்தில் மணம் புரிந்தவர்களும் தங்கி பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தனியாக விடுதி கட்ட வாய்ப்பு இருக்குமா என்று கேட்கிறார்கள்

பணிபுரியும் பெண்கள் விடுதிகள் நடத்தத் தனியார் தொண்டு நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மாநில அரசின் பரிந்துரையின் பேரில், விடுதிக் கட்டிடத்தின் கட்டுமான/விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வரை மத்திய அரசு மானியம் வழங்குகிறது. மேலும் மத்திய அரசின் உதவிக்குக் கூடுதலாக மாநில அரசும் 15 சதவீதம் அல்லது 35,000 ரூபாய், இவற்றில் எது குறைவோ அத்தொகையை தனியார் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கி வருகிறது. நான், இதுப்பற்றி சென்னை நகர கார்ப்பரேஷன் சிறப்பு அதிகாரியிடம் இப்படியொரு இல்லம் அமைக்கப்படவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதுபற்றிய ஆலோசனை நடந்து வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பெண்களுக்காக விடுதி கட்டியிருப்பதாகவும், கட்டப் போவதாகவும் சொன்னார்கள். ஆனால் ஆண்களுக்கும் அதே நிலை இருக்கிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, எனது இலாக்கா பெண்களைப்பற்றிய இலாக்கா. கேள்வி இடம் மாறி வந்திருக்கிறது.

Care-homes for children of employed women.

* 78 Q.— THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether any financial assistance is being given by the Government to private sector undertakings for running care homes for the children of employed women; and

(*b*) whether any financial assistance is being received from the Central Government or from foreign countries for the purpose?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:

(அ) பணிபுரியும் பெண்களின் குழந்தைகளுக்கென்று காப்பகங்கள் நடத்துவதற்கு தனியார் துறை நிறுவனங்களுக்கு மாநில அரசு நிதி உதவி அளிக்கவில்லை.

(ஆ) இதற்காக மத்திய அரசிடமிருந்தோ மற்றும் அயல் நாட்டிலிருந்தோ நிதி உதவி எதுவும் பெறப்படவில்லை. ஆனால் 1977–78 முதல் மத்திய சமூக நல வாரியம் 90 சதவீத செலவை மானியமாக குழந்தைகள் காப்பகங்களுக்கு வழங்கி வருகிறது. இதன்படி 1978–79 ஆண்டுக்கென ரூ. 2,08,472 மத்திய சமூக நல வாரியம் மானியமாக வழங்கியுள்ளது.